பக்கங்கள்: ஆறு

Registered as Nallur Branch Library

# உதயன்

விலை ரூபா 5.00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 23 சனிக்கிழமை (7-08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 252

## கைதிகள் விடுவிப்புத் தொடர்பான

# அரச தரப்பின் திட்டம் புலிகளிடம் கையளிப்பு!

## நேற்று யாழ். அரச அதிபர் நேரில் எடுத்து வந்தார்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 7

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 32 பொலிஸாரையும் மற்றும் ஒரு சிப்பாயையும் விடுவிப்பது தொடர்பாக அரச தரப்பு தயாரித்திருக்கும் புதிய திட்டம் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு ஒப்படைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரச தரப்பின் திட்டத்தை கொழும்பிலிருந்து எடுத்து வந்து நேற்று யாழ்ப்பாணத்தில் புலிகளிடம் கையளித்தார்,

நேற்று முன்தினம் காலை கொழும்பில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தலைமையில் நடந்த விசேட மாநாட்டில், சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகளை விடுவிப்பது குறித்து ஆராயப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கிளாலி சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 7

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று நடைபெற மாட்டாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

### கடற்படையின் பாரிய கப்பல் காங்கேசனில்!

யாழ்ப்பாணம், ஆக. 7

காங்கேசன் துறை துறைமுகத்தில் பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளதாக தெரியவருகிறது (உ-3)

### தொடர்ந்து 10 ஆம் நாளாக கைதிகள் உண்ணாவிரதம்

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் 33 யுத்தக் கைதிகளும் தமது சாகும்வரையான உண்ணாவிரதத்தை நேற்று பத்தாவது நாளாக மேற்கொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சு தம்மை விடுவிக்கும் என தாங்கள் நம்புவதாக அவர்கள் நேற்று ''புலிகளின் குரல்'' வானொலிக்குத் தெரிவித்தனர். (உ-3)

### வவுனியாவுக்கு வடக்கே ராணுவ நடவடிக்கை?

யாழ்ப்பாணம், ஆக. 7

வவுனியாவிற்கு வடக்கே தமது கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியை விஸ்தரிக்கும் நோக்குடன் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முன்னேற்றம் ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை—வவுனியாவில் உள்ள தனியார் வர்த்தகர்கள் பலரிடம் இருந்து படையினர் லொறிகளை எடுத்துச் சென்றுள்ளனர். (உ-3)

### தனியாரும் திணைக்களங்களும்

## தாராளமாக மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு அனுமதி!

யாழ்ப்பாணம், ஆக. 7

தனியாரும் அரச திணைக்களங்களும் தேவையான அளவு மண்ணெண்ணெயை வடக்கே எடுத்து வருவதற்கு ஜனாதிபதி விஜேதுங்க அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். அரச அதிபர் கொழும்பில் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களின் போது, மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் மக்கள் படும் கஷ்டத்தை எடுத்துரைத்ததாகவும் —

அதனையடுத்தே தாராளமாக மண்ணெண்ணெய் எடுத்து வர அனுமதி வழங்கப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

### மணலாறு தாக்குதலில் 78 சிப்பாய்கள் பலி?

கொழும்பு, ஆக. 7

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது கடந்த 25 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 78 சிப்பாய்களும் 28 பொது மக்களும் பலியாகினர். ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகள் சுமார் 150 பறிபோயுள்ளன.

—இவ்வாறு ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இராணுவ உயர்மட்டம் வெளியிட்ட செய்திகளின் படி—

59 சிப்பாய்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும்—

எஞ்சிய 19 சடலங்களும் கிடைக்கவில்லை என்றும் தெரியவந்ததாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-6]

## கிழக்கு இராணுவ நிலைகளை தாக்குவதற்கு புலிகள் திட்டம்?

### திறமைமிகு அணிகள் அங்கு நகர்த்தப்பட்டுள்ளனவாம்

கொழும்பு, ஆக. 7

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதலை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவுகளை மேற்கோள்காட்டி ''த ஐலண்ட்'' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த மாதம் மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தியதைத் தொடர்ந்து, அந்த இயக்கம் கிழக்கிலும் தாக்குதலை நடத்துவதற்கு நிச்சயமாகத் திட்டமிட்டு வருவதாக புலனாய்வு அதிகாரிகள் கூறினர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது திறமையான தாக்குதல் பிரிவுகள் பலவற்றை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### "குமாரி" இன்று வரும்

யாழ்ப்பாணம், ஆக 7

ஆயிரத்து 650 மெற்றிக் தொன் அரிசி, 490 மெற்றிக் தொன் சீனி மற்றும் பருப்பு, ரவை போன்ற பொருள்கள் உட்பட 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

பொருள்களை இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்படுகின்றனவா என்ற தகவல் நேற்று மாலை வரை யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை.

பருத்தித்துறையில் தற்சமயம் தரித்து நிற்கும் வாகுவ பொருள்கள் இறக்கி முடித்து நாளை திருகோணமலை நோக்கி புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### கொழும்புத் தபால்கள் இனி உடனுக்குடன் வரும்

யாழ்ப்பாணம், ஆக. 7

கொழும்புக்கு வந்துசேரும் வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் உடனடியாக கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப இணக்கம் ஏற்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பு தபாலகத்தில் உள்ள கடிதங்களை கப்பல்களில் அனுப்புவதற்கு தடையாக இருந்த விடயங்கள் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் —

கொழும்பில் சேரும் தபால்களை உடனுக்குடன் வடக்கே வரும் கப்பல்களில் அனுப்ப தபால் திணைக்களமும், துறைமுக அதிகார சபையும் இணங்கியுள்ளன என்றும் — அவர் தெரிவித்தார். [உ-3]

### உயர்தர வர்த்தகவியல் மாணவருக்கு!

இப்போது நடைபெற்று வரும் க. பொ. த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகவியல் மாணவரின் நலன்கருதி பங்கு முதல் பரிமாற்று சம்பந்தமான கட்டுரை ஒன்று நாளை உதயனில் ''சூரியகாந்தி'' [illegible] வெளிவருகிறது.

### பல குழுக்களாகப் பிரிந்து சென்ற ஜே.வி.பியை இணைக்கும் முயற்சியில் புதிய கட்சி!

கொழும்பு, ஆக. 7

கொழும்பில் கடந்த வாரம் 'மக்களின் நண்பர்கள்' என்ற பெயரில் (ஜனதா மிதுரோ) புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பம் செய்யப்பட்டது.

பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பிக்குகள் ஆகியவர்களே இக்கட்சியில் பிரதானமாக அங்கம் வகிக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய கட்சிக்கு நாடாளுமன்ற முறையில் நம்பிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் சுவரொட்டிப் போர்

கொழும்பு. ஆக. 7 சுதந்திரக் கட்சியில் சிறிமாவுக்கும், அனுராவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் கொழும்பு நகர சுவர்களில் சுவரொட்டிப் போராகவும் உருவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

"அப்பா! உங்கள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வேன் என்று உறுதிகூறுகின்றேன்" என்று அனுரா ஆதரவு சுவரொட்டிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது

பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

கடைசியாக உயிரிழந்தவர் ஒரு பெண் என்று தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த இப்பெண் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமானார்.


## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் குழாய்க்கிணறு அடித்துக் கொடுப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07 08-93, 08-08 93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

உட்கட்டுமானப் பகுதி
த. பொ. மே. கழகம்,
இல 03, பசம்பியன் லேன்,
கொக்குவில்.

(சி-5566)


## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 13 — 04 — 1908

மறைவு: 18 — 07 — 1993

### அமரர் சபாபதி இராஜலிங்கம்

புண்ணிய நாள் ஆடியிலே புகுந்த அமாவாசையிலே
ஐயா நீர் போனீரே அரன்பாதம் சேர்ந்திரோ
எண்ணி நாம் இருப்போம் எப்போது நீர் வருவீர்
எங்கள் மனக்கோயில் எப்போதும் உமக்காக
திறந்தேதான் இருக்கும் தேதி சொல்லி
வாங்கோ அப்பா!

அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07-08-1993) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

54' சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [26853]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 0. — 04 — 1947

மறைவு: 11 — 08 — 1990

### செல்வி திலகவதி இராஜகோபால்

(பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க ஊழியர்)

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாளும் பொழுதும் நல்லைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, சகோதரிகள்,
மைத்துனர்கள் மற்றும் உறவினர்கள்.

13/2, தலையாழி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (26743)


## நொதேண் கல்வி நிலையம்

(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

# A/L 95

தமிழ்
திரு திருஞானம்
மற்றுமொரு
புதிய பிரிவு

ஆரம்பம்:
10–08–93

(26857)


## ENGLISH TEACHERS FOR KILINOCHCHI DISTRICT

"Applications are sought from retired officers and retired teachers for re-employment for English teaching in secondary schools in the Kilinochchi District. The last drawn salary (with the necessary conversions) will be paid The applicants should satisfy at least one of the following requirements:

1. A Bachelor's degree from a recognized University with English as a subject

OR

2. A Bachelor's degree from recognized University in the English medium

OR

3. A pass in English in the G. C. E. (Advanced Level) with passes in two other subjects

OR

4 Training in English teaching in a recognized teacher's training college

Applicant will have to prepare their own applications giving their Bio-data and all other relevant particulars and send same to reach Head, English Language Teaching Centre, University of Jaffna, Jaffna on or before 20th August 1993. Selection by written Examination and Interview.

REGISTRAR.
University of Jaffna,
Jaffna.

(C-5571)


# கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தகர் சங்கம்
சங்க வளர்ச்சிக்காக நடத்தும்
நிதியுதவி நிகழ்ச்சி

இடம்: இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலம்: 07 - 08 - 93 சனிக்கிழமை

நேரம்: இன்று மாலை 3-30 மணி முதல் இரவு 2-00 மணி வரை

3-30 — 3-45 மணி வரை தேசியக் கொடி, சங்கக் கொடி ஏற்றல்

3-45 — 5-00 மணி வரை மங்கள இசை

தவில்:- திரு என்.ஆர்.எஸ். ரவீந்திரன்
திரு. என் ஆர் எஸ். சுதாகரன்
(காலஞ்சென்ற தவில்மேதை என். ஆர் சின்னராசாவின் புதல்வர்கள்)

நாதஸ்வர இசை
திரு. ஏ முருகானந்தம்
திரு. கே. ஸ்ரீதரன்

5-00 — 7-00 மணிவரை பரதநாட்டியம்
1) நாட்டியகலைமணி செல்வன் எம். அருள்மோகன்
2) நாட்டியகலைமணி திருமதி சுகந்தினி தயாசீலன்

நட்டுவாங்கம்: திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலா பவனம்)
பாட்டு: எஸ். பத்மலிங்கம்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
வயலின்: ஆர். ராதாகிருஷ்ணன்

7-00 — 9-00 மணி வரை
1. மங்கள விளக்கேற்றல் (யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
2. தலைவர் உரை
3. வரவேற்புரை

பிரதம விருந்தினர்:
புதுவை இரத்தினதுரை (கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர்)

சிறப்பு விருந்தினர்:
கொ. க. ஆ. க. நடராசா (முன்னாள் வர்த்தகர் சங்க தலைவர்)
திரு இ. வெங்கட்ராமன் (வர்த்தக வங்கி முகாமையாளர்)
திரு. த. கோவிந்தசாமி (வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜ தலைவர்)

1. மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் உரை
2 பிரதம விருந்தினர் உரை
3. சிறப்பு விருந்தினர் உரை
4. நன்றியுரை

9-00 — 2-00 மணி வரை

சாந்தன், ராஜன்ஸ் குழுவினர்
முதன்முறையாக
ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

★ இன்னிசை கானங்கள் ★

ஒளி: மனோ லைற் கோப்பாய். ஒலி: நித்தி சவுண்ட் யாழ்ப்பாணம்.

ரிக்கட் விபரம்:
1000/- 500/- 250/- 100/-

(ஆயிரம் ரூபா ரிக்கற்றுகளுக்கு மட்டும் இருவர் அனுமதிக்கப்படுவர். மற்ற எல்லா ரிக்கெற்றுகளுக்கும் ஒருவர் மட்டும்)

வாழ்த்துபவர்கள்:

★ அகிலன் பாத அணி நிலையம்
16, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ பி (F) ராங் எம்போறியம்
16, 88. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அசோகா ஆபரண மாளிகை
275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ ரகுராமன் நகை மாளிகை
53, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

★ மதி ஜுவல்லறி
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(26856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Branch Library


# WANTED

**CHUNDIKULI GIRLS' COLLEGE**
JAFFNA.

A Trained / or Graduate

Teacher to Teach English for the middle & upper classes

Application close on
Friday 13th August 1993

(C-5568) - PRINCIPAL.


உள்ளூராட்சி ஊழியர்களுக்கு

# சம்பள மீளளிப்புப் பிணை; அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 7

வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு 1988 இற்கு பின்னர் வழங்கப்பட்ட சம்பள மீளளிப்பு பிணையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு 1988 இற்குப் பின்னர் வழங்கப்பட்ட சம்பள உயர்வு மீளளிப்பு இதுவரை வழங்கப்படவில்லை. இப்பகுதிகளில் நிலவும் சூழ்நிலையால் உள்ளூராட்சி மன்றங்கள் வருமானம் இழந்துள்ளமையைக் காரணம் காட்டியே இதுவரை மீளளிப்பு வழங்கப்படாதிருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ப. நோ. கூ. ச. ஊடாக

## கட்டுப்பாட்டு விலையில் ரயர், ரியூப் விநியோகம்

அரியாலை, ஆக 7

''வாதுவ'' கப்பலில் எடுத்துவரப்பட்ட 8,000 சைக்கிள் ரயர், ரியூப்புக்கள் கட்டுப்பாட்டு விலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசம் மேற்கொண்டுள்ளது.

'வாதுவ' கப்பலில் எடுத்துவரப்பட்ட டி. எஸ். ஐ ரயர், ரியூப்புகளை குறைந்தபட்சம் 200 ரூபாவுக்கு விநியோகிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமாச அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இதேவேளை — அடுத்து கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் கப்பலில் மேலும் 3 ஆயிரம் சைக்கிள் ரயர், ரியூப்புகள் எடுத்து வரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-17)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

| தோற்றம்! | | மறைவு! |
|---|---|---|
| 12 |  | 08 |
| — | | — |
| 06 | | 07 |
| — | | — |
| 1938 | | 1993 |

திருமதி
## செல்வமணி பேரம்பலம்

எங்கள் அன்புத் தெய்வமே! குடும்பத்தின் ஒளி விளக்கே! முப்பது வருடங்களாக எமது வாழ்வின் ஒளியாக திகழ்ந்து திடீரென எம்மை விட்டு மறைந்து எங்கள் குடும்பத்தை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டீர்களே! உங்களை வாழ்நாள் முழுவதும் எங்கள் மனதில் இருத்தி அஞ்சலி செய்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (7-8-93) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

உங்கள் பிரிவால் ஆறமுடியாத் துயருறும்;
அம்மா, கணவன், மகன்மார்,
சகோதரர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

செ. பேரம்பலம்,
20, பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

(26841)

# யுத்தச் செலவை சமாளிக்க புதுமையான யோசனை

## பௌத்த விகாராதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஆக. 7

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கான செலவைச் சமாளிப்பதற்கான நிதியைத் திரட்ட புதுமையான யோசனை ஒன்றை திம்புலாகல பௌத்த விகாரையின் பிரதம குருவண. மாத்தறை சித்தலகம சீலாலங்கார நாயக்கதேரர் வெளியிட்டிருக்கிறார்.

''அனைத்து அரசியல்கட்சிகளும் தடை செய்யப்பட வேண்டும்.

''அனைத்து ஆலயங்கள், கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் ஆகியவற்றின் நிதிவளங்கள் முடக்கப்பட வேண்டும்.

''அரசியல் கட்சிகளின் நிதிவளங்களும் முடக்கப்பட வேண்டும்.

''இப்படி திரட்டப்படும் பணத்தைக் கொண்டு யுத்தத்தை நடத்துவதற்கு தேவையான போர்த் தளபாடங்கள் வாங்கப்படவேண்டும்''—

இவ்வாறு பிரதம குரு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தபடி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். உடல் நலக்குறைவு காரணமாக அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

''அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து விடுதலைப் புலிகளை நசுக்க வேண்டும்.

அதன்பின்னர் மூன்று இனங்களும் நாட்டை ஆள ஓர் அரசனைத் தெரிவு செய்யலாம். தற்போதைய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை ஒன்றுபடுத்த நான் கூறிய இந்த யோசனைக்கு மாற்றாக வேறு ஒன்றுமே இல்லை''— என்றும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (த-எ)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. எஸ். சிதம்பரநாதன், திரு. எஸ். சொர்ணலிங்கம் குழுவினரின் மங்கள இசை இடம்பெறும்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15 — 6-15 ''பாஞ்சாலி சபதம்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்:—

பிற்பகல் 2 — 3 மணிவரை ''சிவதீட்சை'' எனும் பொருளில் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் சமயச் சொற்பொழிவு.

மாலை 5 30 — 6-30 மணிவரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''அருஞ்சமர் செய்த அக்கினி முகாசுரன்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க-111-126)

## நினைவு மலர்

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமக் குருமணி வடிவேல் சுவாமிகள் நினைவாக நினைவு மலர் ஒன்று வெளியிடப்படவிருக்கிறது.

இணுவில் பரராஜசேகரம் பிள்ளையார் ஆலய திருநெறிய தமிழ் மறைக் கழகம் இந்த மலரை வெளியிடவிருக்கிறது.

விரைவில் மலர் வெளியிடப்படவிருப்பதாக கழகத்தினர் தெரிவித்தனர். (த-3)

## தையல் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பருத்தித்துறைப் பிரிவு நடத்தும் 1993 ஜூலை - டிசெம்பர் வரைக்கான தையல் பயிற்சி பருத்தித்துறைப் பிரிவுக் காரியாலயத்தில் (இ. போ. சபைக்கு முன்பாக) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சேர விரும்பும் மாணவர்கள் உடனடியாக அலுவலகத் தையல் பயிற்சி ஆசிரியை திருமதி இ. பத்மநாதன் அவர்களைச் சந்தித்து அனுமதி பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
295/35, கே. கே. எஸ். வீதி, கோணாந்தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்

# முக்கிய அறிவித்தல்

## கிளைக் குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான நியமிப்புப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 15-08-1993 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 — முற்பகல் 10-00 மணி வரை. அபேட்சகர்கள் நியமிப்புக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10-00 மணிமுதல் 11-00 மணிவரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்துமூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 22-08-1993 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 — பிற்பகல் 4-00 மணிவரை நடைபெறும். பின்வரும் கிளைகளுக்கான நியமிப்புப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 01 | மண்டைதீவு | இல. 135, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம். |
| 02 | மண்டைதீவு | " " |
| 03 | அல்லைப்பிட்டி | இல. 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், கிளை விற்பனை நிலையம், |
| 14 | சரவணை | " " |
| 07 | வேலணை தெற்கு | கே.கே.எஸ். வீதி கோணாந்தோட்ட ஒழுங்கை யாழ்ப்பாணம், சங்க தலைமையலுவலகம் |
| 08 | சந்திரா | " " |
| 09 | சிற்பனை | " " |
| 10 | வங்களாவடி | மானிப்பாய் வீதி கோணாந்தோட்டம் யாழ்ப்பாணம் கிளை விற்பனை நிலையம் |
| 11 | வேலணை மத்தி | " " |
| 12 | சோளாவத்தை | " " |
| 13 | பள்ளம்புலம் | " " |
| 16 | அம்பிகை நகர் | " " |
| 06 | தேவி கோட்டம் | இல. 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை விற்பனை நிலையம் |
| 15 | கேணிக்கரை | " " |
| 04 | மண்கும்பான் | மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டம் யாழ்ப்பாணம், கிளை விற்பனை நிலையம் |
| 05 | ஆலம்புலம் | " " |

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(பி-5556)

பொ. கணேசலிங்கம்,
தேர்தல் உத்தியோகத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒன்றரை மாத நல்லின சேவல்கள் விற்பனைக்குண்டு. பக்குவமாக வளர்க்கப்பட்டவை. ஊர்க்கோழிகளுடன் கலப்பினம் செய்து அதிக முட்டையிடும் கோழிகளை உருவாக்க உகந்தவை. 1010/9, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி. (26648)

அடை வைப்பதற்குகந்த விப்பிங்கிளர், பாமாஸ், பாமாஸ் கறுப்பு ஆகிய முட்டைகள் உடன் விற்பனைக்கு உண்டு. பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (26844)

ஓட்டுமடம் சந்தி அராலி றோட் அலுமினியம்பக்ரறிக்கு அருகில் 1¼பரப்பு காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: J. யேசுதாசன், இல 3, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (26837)

அழகிய வெள்ளைநிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் ஒன்றரை மாதம் நிரம்பியவை, பூச்சி நீக்கப்பட்டவை விற்பனைக்குண்டு இல. 81/1 (257), கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (26832)

### மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6 8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

### CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

### மணமகள் தேவை

இந்து, 34 வயது M.B.B.S. டாக்டருக்கு பெற்றோர் அழகிய இலங்கை மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் உத்தரம் முதலாம்கால், செவ்வாய் குற்றமற்றவர், பட்டதாரியோ அல்லது கூடிய படிப்புள்ள பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடனும், முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். இல. 552, மே/பா உதயன். (26820)

35 வயதுடைய கனடாவில் நிரந்தர வதிவிடமுள்ள பூராடம் நட்சத்திரம், 4ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற, நிரந்தர தொழில் பார்க்கும் நற்குணமுடைய வரனுக்கு நற்குடும்பத்தில் உள்ள பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். விண்ணப்பிக்கவும். 913, மே/பா உதயன். (சி-5651)

### தேவை

G. C. E. A/L கணக்கியல் படித்தவரும், தமிழ், ஆங்கில தட்டச்சு வேலை தெரிந்தவருமான பெண் லிகிதர் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். கு. வி. அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6400)

### பராமரிப்பாளர் தேவை

செல்வச்சந்நிதி அடியார் மடத்துக்குப் பராமரிப்பாளர் தேவை. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கணவன் மனைவியோ, தனியாளோ காலை 9 மணியின் மேல் நேரில் வரவும். ம. வெங்கடாசலபிள்ளை, நிர்வாகி, அடியார் மடம், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு. (26840)

### கைமாறிய சைக்கிள்

நேற்று முன்தினம் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளைக்கு முன்பாக நிறுத்திய எனது 'றொலிசன்' சைக்கிளை யாரோ தமது 'லுமாலா' சைக்கிளுக்கு பதிலாக தவறுதலாக எடுத்து சென்றுவிட்டார்கள். தயவு செய்து என்னுடன் தொடர்பு கொண்டு மாற்றிப் பெற்றுக் கொள்ளவும். ஏ. எஸ். தியாகராஜா, 'அல்டி', 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6404)

### புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேறுகளைப் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் அடுத்த வினாத்தாள் 8 - 8 - 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். இவ் வருடம் வெளியிடப்பட்ட வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26810)

### விஞ்ஞானம் O/L

அலகு ரீதியான மாதிரி வினா-விடை வகுப்பு 7-8-93 (காலை 6-00 மணி) ஆரம்பம் ஞாயிறு சனிக்கிழமைகளில் காலை 6-00மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும். ஆசிரியர் J. J. கொலின்ஸ். வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதா கோவில் அருகில் (சோபா வீதி), உயரப்புலம், ஆனைக்கோட்டை. (26830)

### தவறிவிட்டது

கிளாலிக் கரையில் 28-7-93 அன்று 591702921V இலக்க அடையாள அட்டை, பென்ஷன் சம்பந்தமான கடிதங்கள் மற்றும் பொருள்களுடன் Travelling Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ம. தேவக்குமாரன், வட்டு கிழக்கு, சித்தன்கேணி என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26851)

### புதிய பங்குத் தந்தை

உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தின் புதிய பங்குத் தந்தையாக அருட்திரு. அன்ரனிதாஸ் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் கடந்த காலங்களில் நெடுந்தீவில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னர் ஆலயத்தில் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த அருட்திரு நேசராசா அடிகள் தற்பொழுது கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். (க)

## வீக்னா
## கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

மீட்டல் வினா-விடை வகுப்பு

**வர்த்தகம் 94**

**திரு. தேவா**

ஆரம்பம்:
**7 - 8 - 93**
காலை 10-00 மணி

(சி-5647)

## வீக்னா
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பிரத்தியேக வகுப்புக்கள்

பொருளியல்

94 மீட்டல் வினா - விடை வகுப்பு
12-30 — 2-30

95-புதிய பிரிவு
2-30 — 3-30

திரு. கலாகரன்

ஆரம்பம்:
08-08-1993

(சி-5649)


## தென் இந்தியத் திருச்சபை
## யாழ். பேராயம்
# முதியோர் இல்லம்

இணுவில் மக் லியோட் வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள முதியோர் இல்லத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். 30 - 08 - 1993க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
மக் லியோட் வைத்தியசாலை,
இணுவில், சுன்னாகம்.

(இ-5644)

## நெஞ்சம் நெகிழும்
## 41ஆம் நினைவு நாளும் நன்றி நவிலலும்
(9 — 8 — 1993)



மண்ணில்: 05 — 03 — 1967

விண்ணில்: 30 — 06 — 1993

### செ. யோய் வசிகுமார்

''மாதம் ஒன்று ஓடி மறைந்திட்டபோதும்
மனதினிலே உன் நினைவு மாறவில்லை
நீரினிலே நீர் இறந்த செய்தி எங்கள்,
நெஞ்சினிலே நினைவலைகள் போலே வந்து,


மாதா, பிதா, சோதரர்கள், மனதினையே,
கல்லின் மேல் எழுத்துப் போல் காணுதவே
உந்தனது ஆன்மாவின் சாந்திக்காய்
ஈசனது பதமலரைப் போற்றுவோமே''

காலஞ்சென்ற செ. யோய்வசிகுமாரின் மரணத்தையிட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து, எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், கடிதமூலம் அனுதாபச் செய்தி அறிவித்தவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.

பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரர், மைத்துனர், உறவினர்.

கி. அ. செபஸ்தியாம்பிள்ளை
இல. 17/2, மருதடிறோட்,
யாழ்ப்பாணம். (26847)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 20 — 06 — 1969

விண்ணில்: 23 — 07 — 1989

### செல்வன் மகாலிங்கம் மகேஸ்வரன்


திதி: 7 — 8 — 1993

அன்பின் திருவுருவாய்
அவதரித்த அண்ணாவே!
நீங்கள் எங்களை விட்டுப்
பிரிந்து ஆண்டுகள்
நான்கு கழிந்தாலும்
உங்கள் நினைவுகள்
என்றுமே எம் நெஞ்சங்களை
விட்டு அகலாதன.

உங்கள் நினைவால் வாடும்;
குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (6388)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### செல்லையா சிவகாமிப்பிள்ளை
(புங்குடுதீவு)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து நல் வழிகாட்டி வாழ வைத்த தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

24/3, செவப்பிரகாசம் வீதி,
மதவடி லேன்,
யாழ்ப்பாணம். (6403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சரியான நோக்கம் வேண்டும்

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகள் முப்பத்துமூன்று பேரும் தமது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் பத்து நாட்களாகின்றன.

அவர்களில் பலரின் உடல் நிலை பாதிப்புற்று, வைத்திய பரிசோதனை செய்ய வேண்டியதாயிற்று எனினும் அரசாங்கம் அவர்களின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சூழ்நிலையை இன்னும் உருவாக்கவில்லை.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் நேற்று யாழ். வந்து சேர்ந்துள்ளார். அவர் விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் தான், இம்முறையாவது யுத்தக் கைதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியுமா என்பது தெரியவரும்.

யுத்தக் கைதிகள் இப்போது இரண்டாவது முறையாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஜூன் மாதத்தில் இவர்கள் முதலில் உண்ணாவிரதம் இருந்தபோது அரசின் விசேட பிரதிநிதி ஒருவர் வந்தார். விடுதலைப் புலிகளுடன் பேசினார். யுத்தக் கைதிகளை விடுவிக்க இணக்கம் காணப்பட்டது.

ஆனால் அவர் கொழும்பு சென்றதும் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை மீறியது. புதிதாகத் தான் நினைத்ததையே செயலாக்க முனைந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனை விதிப்பதாக சிங்கள மக்களுக்கு கூறி யுத்தக் கைதிகளை நட்டாற்றில் கைவிட்டது.

இம்முறையும் யுத்தக் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து ஒருவாரகாலமாக அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. அரசாங்க பொது சனத் தொடர்பு சாதனங்களான வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ உண்ணாவிரதம் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக்கைதிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடியவர்கள். விரும்பியோ விரும்பாமலோ தமிழர்களின் எதிரிகளாகச் செயற்பட்டவர்கள். தமது குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக மாதச் சம்பளம் ஒன்றை நாடியே ஸ்ரீலங்காப் படையில் இணைந்தார்கள். பலர் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஏழை இளைஞர்கள்.

தமிழர்களின் எதிரிகளாக இருந்த போதிலும், தமக்கு எதிராக போராடியவர்களாக இருந்த போதிலும் விடுதலைப் புலிகள் மனிதாபிமானத்துடன் யுத்தக் கைதிகளை விடுவிக்க முன்வந்தார்கள். ஆனால் அரசு தனது பக்கத்தில் நின்று போராடியவர்களை விடுவிக்க வேண்டாத அரசியல் பேரங்களைப் பேசி அவர்களின் விடுதலைக்கான சூழ்நிலையைக் கெடுத்துக் கொண்டது.

இம்முறையும் அதுபோலவே நடந்துகொள்ளாமல் இருந்து தமது பக்கத்தில் நின்று போராடிய தமது சொந்தப் படையினர், தமது சொந்தச் சிங்கள இளைஞர்களை மீட்க மனவிருப்பத்துடன் செயற்படுகிறார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

யுத்தக் கைதிகள் விவகாரத்திலும் அரசியல் லாபம் பெறுவதையும் பேரைத் தொடர்வதையும் இலக்காகக் கொள்ளாது, தங்கள் படையினரை மீட்க வேண்டும் என்ற நோக்குடன் அரசு செயற்பட்டால் அவர்களின் விடுதலை கஷ்டமான காரியமாகி விடும்! நோக்கம் சரியானதாக இருந்தால் காரியம் சித்திக்கும்!

## பாடசாலைகளில்

சாவகச்சேரி நகரசபையினால் பராமரிக்கப்படும் சங்கத்தானை இளங்கோ பாலர் பாடசாலை, மட்டுவில் தெற்கு கலைமகள் பாலர் பாடசாலை ஆகியவற்றிற்கிடையிலான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென் மட்டுவில் கலைமகள் பாலர் கழக மைதானத்தில் நடைபெறும். (க-117)

o o o

சரசாலை மத்தி அப்பாள் அறவழி பாலர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (க-117)

## நாளை

1990 ஆம் ஆண்டு இலங்கை நூலகவியல் சங்கத்தில் நூலகவியல் கற்கைநெறிக்குப் பதிவு செய்துகொண்ட மாணவர்களின் பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 11மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் (க)

o o o

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் உணவு உற்பத்தி ஊக்குவிப்பு, விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு சமாச மண்டபத்தில் நடைபெறும். (த-17)

o o o

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக்குழுவினால் அமைக்கப்பட்ட சமூக கூடங்களின் திறப்புவிழா நாளை மாலை 4 மணிக்கு சரசாலை இடம்பெயர்ந்தோர் குடியிருப்பிலும் மாலை 5 மணிக்கு கெருடாவில் இடம்பெயர்ந்தோர் குடியிருப்பிலும் இடம்பெறும். (உ-162)

o o o

ஜனசவிய திட்டம் பற்றிய கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ் செயலக வேட்போர் மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் சகல பிரிவுச் செயலர்கள், மாவட்ட பிரதி ஆணையாளர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், சகல உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (உ-162)

o o o

வலி. வடக்கு கிழக்குப் பிரதேச சென் ஜோன் முதலுதவிப் பிரிவின் ஆதரவுடன் சானரம் இதழ் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9 மணிக்கு சுந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் நடைபெறும்.

o o o

கைதடி கிழக்கு சனசமூக நிலையபாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை மாலை நிலையத் தலைவரின் தலைமையில் நிலையத்துக்கு அருகில் இடம்பெறும்.

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை பிற்பகல் மூன்று மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு சி. இராமநாதர் தலைமை தாங்குவார். முன்னாள் இலங்கை வங்கி பதில் அதிபர் எஸ். பத்மநாதன் "பாவகாதிகள்" என்னும் தலைப்பிலும் முன்னாள் அரச ஊழியர் என். மகேந்திரராஜா "சந்துஷ்டி" என்ற தலைப்பிலும் ஆய்வுரை வழங்குவர்.

# வடபகுதி இளைஞர்கள் கொழும்பில் வைத்துக் கைது

கொழும்பு, ஆக. 7

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, கிராண்ட்பாஸ் ஆகிய இடங்களில் உள்ள விடுதிகளில் பொலிஸார் நடத்திய தேடுதலின் போது வடபகுதி இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் வரிகாவற்றுறையைச் சேர்ந்த நவரத்தினதினசிங்கம் மோகன் சிங்கம், தருமலிங்கம் அருணகிரிநாதன், யாழ். பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த சிவராஜா தேவானந்தன், கொக்குவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் உதயகுமார், நயினாதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிவகுமார், திருநெல்வேலியைச் சேர்ந்த குமாரலிங்கம் ராஜேந்திரன் ஆகியோரும் அடங்கியிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# வடக்கு - கிழக்கில் மேலும் 5 பிரதேச செயலகங்கள்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேலும் 5 பிரதேச செயலகங்கள் அமைக்கப்படும்.

நாட்டில் உள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை 28ஆக அதிகரிப்பது என்று அமைச்சர்கள் மட்டத்தில் அண்மையில் முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்தே வடக்கு - கிழக்கிலும் 5பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டல் பெரேரா வெளியிட்டுள்ளார்:

இதன் அடிப்படையில் வடக்கில் 2 பிரதேச செயலகங்களும், கிழக்கில் 3 பிரதேச செயலகங்களும் அமைக்கப்படும். (த-173)

## கலகக்காரர்களைக் கலைக்க

# நீர்ப் பீரங்கி வாகனம்; அரசாங்கம் கொள்வனவு

கொழும்பு, ஆக. 7

பெருந்தெருக்களிலும் பொது இடங்களிலும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் கலகக்காரர்களை நீரை விசிறி அடித்து கலைப்பதற்கு பயன்படும் நீர்ப்பீரங்கியுடன் (water Cannon) கூடிய வாகனம் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு இறக்குமதி செய்துள்ளது.

ஸ்ரீலங்கா பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "திவயின" சிங்கள பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது

இந்த நீர்ப்பீரங்கியுடன் கூடிய வாகனத்தின் பெறுமதி 10 லட்சம் ரூபாவென வும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

# விளையாட்டு நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திவரும் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளி மாலை கொழும்புத்துறை இந்து ம. வி. மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ 3.30 மணி:- புனித யாகப்பர் வி.க. எதிர் புனித ஆரோக்கியநாதர் வி.க

★ 4.30 மணி:- எழிலூர் அன்னைவேளாங்கன்னி வி.க. எதிர் இளங்கதிர் வி.க. (உ-17)

o o o

நவாலி தெற்கு மதி ஒளி சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டி நடத்தப்படும் இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் நிலைய விளையாட்டரங்கில் ஆரம்பமாகும். (உ-20)

o o o

காந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கன்னாகம் சிங்கமாப்பாணர் மைதானத்தில் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — விலகல் முறையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் மாலையில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ இன்று:- அரியாலை ஐ வி.க எதிர் புத்தூர் வீனஸ் வி.க.

★ நாளை:- இளவாலை ஹென்றிஸியன் வி. க. எதிர் உரும்பராய் ஒஸ்கா வி.க. (உ-20)

## ஆலயங்களில்

வட்டுக்கோட்டை அராலி மேற்கு கொட்டைக்காடு நொச்சியம்பதி அருள்மிகு விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-161)

o o o

அச்சுவேலி, ஆக. 7

அச்சுவேலி பத்தைமேனி தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

16 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ-11)

## பாதயாத்திரை

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினர் நல்லூர் ஆலய உற்சவத்தையொட்டிய வருடாந்த பாதயாத்திரையை எதிர்வரும் ஞாயிறு காலை 4-00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளனர். (க-117)

# இன்று

யாழ்ப்பாணம், ஆக. 7

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் "நல்லைக் குமரன்" மலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (க-162-17)

o o o

நவா கல்வி வளர்ச்சிக்கழக ஓராண்டு நிறைவை முன்னிட்டு தீவகக் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவரமைப்பினால் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் சிறப்புரைகளும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும். (க)

o o o

யாழ். வர்த்தகர் சங்கத்தினால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் இன்று சனி மாலை 4 மணிக்கு சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்ச்சிகளில் பரத நாட்டியம், நாதஸ்வர இசை மற்றும் சாந்தன், ராஜன்ஸ் இசைக்குழுவினர்கள் முதன் முறையாக இணைந்து வழங்கும் இசை நிகழ்ச்சி ஆகியவையும் இடம்பெறும். (த)

o o o

அராலி மேற்கு சமாதானக் கோட்டை வளர்ச்சி குன்றிய சிறார்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக ராஜன் கதிர்காமர் பொதுப் பணி விளையாட்டு கழகத்தினர் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உள்ளூர்ப் பிரமுகர்களின் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர். (க-161)

o o o

சகோதரன் ஜெயராஜா, பெஞ்சமின் அருட்செல்வம் இன்று சனிக்கிழமை உதவிக் குருவாக அபிஷேகம் பண்ணப்பட உள்ளார்.

இதுதொடர்பான வைபவம், காலை 8-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசனால் நடத்தப்படும். (இ-161)

o o o

யாழ் கில்னர் மண்டபம் சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று காலை 9 மணி முதல் கில்னர் மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் சென். ஜேம்ஸ் தேவாலய குருமனையின் பிதா வண. ஈ. ஜே. ஜெபரட்ணம், திருமதி ஈ. ஜே ஜெபரட்ணம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். (உ)

உ

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## தேரவைக்கும் தெய்வக் குமரன்

கானக் குறவர் மட்மகளுக் பொற்பணைந்த
வானகத்துக் குஞ்சரியும் பங்காக - ஞானவைவேல்
தாங்குந் திருக்கரத்தான் நல்லூரான் சீபாதந்
தாங்கும் அடியவரைத் தான்.

ஆற வழியின்றி அல்லற் படுவோரைத்
தேறவைக்குந் தெய்வக் குமரனைப்போல்-ஆறுமுகன்
தாங்குந் தனிவேலும் ஆறிலைவேல் அவ்வேலும்
தாங்கும் அவனருளாற் றான்.

— மட்டுவில் ஆ. நடராசா

# ... நெடு பெருங்கடல் என தேக்கிடுவார்-தேக்கார் தேசிய நலன் பேணார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்கிண்டிமலை தாக்குதல்; ராணுவ நீதிமன்றவிசாரணை

கொழும்பு, ஆக 7 மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பற்றிய இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து, இராணுவ நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (த-எ)

# மரண அறிவித்தல்கள்

## J. T. தம்பிரெத்தினம்

(முன்னாள் பிரதி அதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)

உடுவிலைச் சேர்ந்த J. T. தம்பிரெத்தினம் (முன்னாள் பிரதி அதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) 7-6-93இல் காலமானார்.

இவர் மேரி சுகிர்தமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் சத்தியானந்தன், இரத்தினமலர், சற்குணானந்தன், பிறேமானந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சரோஜினி, பத்மயெயன், வதனி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

தகவல்;

T. சத்தியானந்தன்.

டானியல் இல்லம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில். (சி-5572)

## முத்து கதிரவேலு

(ஓய்வு பெற்ற புகையிரதப் பகுதி கங்காணி)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்து கதிரவேலு 5-8-1993இல் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மேஸ்வரி (ஆசிரியை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) மகேஸ்வரன் (U.K), கமலேஸ்வரி (ஆசிரியை - மட்டுவில் தெற்கு சரஸ்வதி க. வி.), காலஞ்சென்ற குமரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (ஆசிரியர், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ்), கலாரஞ்சினிதேவி (U.K) அழகராசா (மக்கள் வங்கி சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற பாக்கியம், மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ரஞ்சினி தியாகேஸ்வரன், உதயதாஸ், சத்தியதாஸ், சுஜீபன், சோபிதா, ஜனன், அனந்தன், சுரேந்தன், லசிதா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜீவினியின் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8-8-1993 ஞாயிற்றுக்கிழமை காலை 10.மணியளவில் நடைபெறும்.

தகவல்:

பொ. அழகராசா
(மருமகன்)

மட்டுவில் தெற்கு,
நுணாவில் (26848)

## கார்த்திகேசு கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்)

கார்த்திகேசு கனகரத்தினம் 5-8-1993 இல் காலமாகிவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேந்திரன், டாக்டர் சரோஜினிதேவி, இராசேந்திரன், றஜினி, குவேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிதரத்தினம், டாக்டர் யோகரத்தினம், கமலினி, டாக்டர் குணசுந்தரம், பவளராணி, றதி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 7-8-1993 காலை 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

க. மகேந்திரன்
(மகன்)

மனோ வாசா,
கொக்குவில் கிழக்கு. (6408)

## சிவப்பிரகாசம் சுக்லிலி சௌந்தரநாயகம்

(முன்னாள், லிவர் பிறதேர்ஸ் லிமிடெட்)

சிவப்பிரகாசம் சுக்லிலி சௌந்தரநாயகம் 31-07 1993 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கமலாம்பிகையின் (தேசிய அபிவிருத்தி வங்கி, கொழும்பு) அன்புக் கணவரும், டவின்னா, டிம்யான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வி. எஸ். சிவப்பிரகாசம்- திருமதி எல். ரி. சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி கணபதிப்பிள்ளை (உசன்) யின் அன்பு மருமகனும், அருள், காலஞ்சென்ற டட்லி, லோறன்ஸ், புஸ்பம், மோர்லி, லில்லி, கிங்ஸ்ரன், கஸ்ரன், சாம்சன் ஆகியோரின் சகோதரரும், சொர்ணம், கனகரத்தினம், அல்பிரட், பிரியாந்தி, லக்ஸ்மன், ஜெயந்தி, மாக்கிரட், சிவனேசன், சிவபாலன், Dr. சிவசுதன், ஜெகதாம்பிகை (ஆசிரியை, உசன் இ.ம வி), கனகாம்பிகை (கச்சேரி வவுனியா), Dr. யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 03-08-1993 இல் கல்கிசையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:

தி. ஸ்ரீஇராமநாதன்
(சகலன்)

ஸ்ரீரங்கம்
உசன், மிருசுவில். (26855)

# போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக. 7

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையும், இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையும் இம்மாதம் 25 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

இதேவேளை, எழுதுவினைஞர் அதிவிசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். இத்தகவல்களை யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ-162)

## தாராளமாக --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதிய அளவு வெற்று பரல்கள் இல்லாத காரணத்தால் கூடுதலான மண்ணெண்ணையை அனுப்ப முடியாதுள்ளதாக பெற்றோலியம் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளதாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

யாழ். செயலகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் கடந்த ஜனவரிமுதல் ஜூலை வரை 12 ஆயிரத்து 224 பரல் மண்ணெண்ணெய் மட்டுமே வடக்கே வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இரண்டரை மாதங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய்யே கடந்த ஏழு மாதங்களில் வடக்கே வந்து சேர்ந்திருக்கிறது,

இதனிடையே —

சுமார் ஆயிரம் பரல் மண்ணெண்ணெய், தீப்பெட்டிகள், அப்பியாசக் கொப்பிகள் ஆகியவற்றுடன் மற்றொரு கப்பல் இரண்டொரு நாட்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ 3)

## ஜே.வி. பியை --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை; அதேவேளை ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் போக்கையும் புதிய கட்சி நிராகரிப்பதாக அக்கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது

ஜே. வி பியில் இருந்து பிரிந்து சென்ற குழுக்களை ஒன்று சேர்க்கவும் புதிய கட்சி முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய கட்சியை பதிவு செய்யும்படி கட்சியின் நிர்வாகம் தேர்தல் ஆணையாளரிடம் விரைவில் விண்ணப்பிக்க இருக்கிறது. (உ-எ)

## கிழக்கு--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்கு மாகாணத்துக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே நகர்த்தியுள்ளனர் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—

பெரும்பாலும் மட்டக்களப்பில் தான் இத் தாக்குதல் இடம் பெறக்கூடும் என்றும் "ஐலண்ட்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## கொழும்பில்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் முதலில் காணப்பட்டன

"ஆயிரக்கணக்கான புதல்வர்கள், புதல்விகளின் நன்மை கருதி தமது சொந்த மகனையே கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்த அம்மையாருக்கு எங்கள் வீர வணக்கங்கள்" — என்று கூறும் சிறிமா ஆதரவு சுவ [illegible] [illegible] சுவரொட்டிகள் இருதரப்பினராலும் ஒட்டப்பட்டிருக்கின் [illegible] (உ-எ)

# யாழ். சிற்பக் கலைஞர் கொழும்பில் கைது

கொழும்பு, ஆக. 7

தேர்த்திருப்பணி வேலைக்காக கொழும்பு வந்திருந்த, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிற்பக் கலைஞர் ஒருவரை இரகசியப் பொலீஸார் கைது செய்து 4 ஆவது மாடியில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த கனகசபை செல்வராசா (51 வயது) என்பவர் கொழும்பு மயூரா பிளேஸ் அம்மன் ஆலய அறங்காவலர்களின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்று தேர் அமைக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தார் என்றும் —

அவரை கடந்த 27 ஆம் திகதி அந்த ஆலயத்தில் வைத்து இரகசியப் பொலீஸார் கைது செய்தனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## சர்வசன வாக்கெடுப்பு விவகாரம்:

# எச்சரிக்கையுடன் முடிவு எடுக்க தெரிவுக்குழு சிபாரிசு

கொழும்பு, ஆக. 7

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து தீர்மானம் எடுப்பதில் அரசாங்கம் மிக எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும்.

—நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையில் முன்கண்டவாறு சிபாரிசு செய்யவிருப்பதாக தெரிவுக்குழு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவிருக்கிறது.

இந்திய அரசமைப்பில் உள்ளது போன்ற அதிகாரப்பரவலாக்கல் அமைய வேண்டும் என்றும்—

இந்திய - இலங்கை உடன்படிக்கையில் உள்ள விதிகள் விரைவில் அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையில் சிபாரிசு செய்யப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும்படி அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்வது என்றும் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளதாம். (உ-எ)

## அரச --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

கூட்டுப்படை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, ஜனாதிபதியின் பந்தோபஸ்து ஆலோசகர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர் உட்பட பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரச தரப்பின் யோசனை அடங்கிய திட்டம் ஒன்று அந்த மாநாட்டில் தயாரிக்கப் பட்டதாகத் தெரியவருகிறது.

அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அரச அதிபர் நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்தார். அங்கிருந்து "வாதுவ" கப்பல் மூலம் அவர் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தார்.

அரசதரப்புத் திட்டத்தை நேற்று மாலை அரச அதிபர் புலிகளின் பிரமுகர்களிடம் ஒப்படைத்தார். (உ-3)

## ஜப்பானின் புதிய பிரதமர்

ஜப்பானின் புதிய பிரதமராக ஹொறிஸ் மொறிஹிரோ ஹொஸாகா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவர் எதிர்வரும் திங்கட்கிழமை பதவியேற்பார்.

இதுவரை—கடந்த 40 ஆண்டுகளாக—ஜப்பானை ஆட்சி செய்து வந்த லிபரல் ஜனநாயக கட்சியின் வேட்பாளரை, பிரதமர் தெரிவின் போது பெரும்பான்மைக் கூட்டணியின் தலைவரான ஹொஸாகா 224 இற்கு 262 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். [உ-6]

## கோழிகளுக்கு தடுப்பூசி

ஏழாலை மேற்கு உதயசூரியன் நூல் நிலையத்தில் வைத்து நாளை காலை 10 மணிக்கு கோழிகளுக்கு தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-45]

## வீரசேகரா பாகிஸ்தானில்

யுத்தக் கைதிகள் விடுவிப்பது சம்பந்தமாக அரசதரப்புத் தூதராக முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த புனர் வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா அலுவலகக் கடமை காரணமாக தற்போது பாகிஸ்தான் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி (செற் அப்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

நடத்தும்

"உதயணன்" சுழல் கேடயத்திற்கான

யாழ். மாவட்ட ரீதியில் அமைந்த

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி (செற் அப்) — 1993

போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் மின்னொளியில் நடைபெறும்

இச் சுற்றுப்போட்டி பருத்தித்துறை இராஜன்ஸ் சைக்கிள் வேக்ஸ் ஸ்தாபன உரிமையாளர் இராசதுரை அவர்களின் மகனின் நினைவாக அத்தாபனத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள்

செயலாளர்,
ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
பருத்தித்துறை.

இராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

ஆகிய முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்

முடிவு திகதி 15-8-93

(சி/5573) - ஐ. வி. கழகம், பருத்தித்துறை.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/1 இலக்கத்தில் அச்சகத்தில் 7-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org